
உ

சிவமயம்



இலங்கை நீர்வேலியில் பிறந்தவரும் வடமராட்சி நெல்லியடி
இலண்டன் ஆகிய இடங்களில் வசித்தவருமான

இளைப்பாறிய ஆசிரியர்

## திருமதி சரவணமுத்து பாக்கியம்

அவர்களின்

# நினைவுப் பெட்டகம்

13.04.2011

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

அன்பே
உருவான இவ்வுலகில்
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது என்ற திருக்குறளின்
தத்துவத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்த எங்கள் மாதாவே!
குடும்பத்தில் பாசமும் பற்றும் பண்பிலும்
சிறந்த எங்கள் தாயே!
கல்வி அறிவிலும் கண்டிப்பிலும்
நல்லொழுக்கப் பண்பிலும் நெறிப்படுத்தி
எம்மை வாழ வைத்து இம்மண்ணுலகை விட்டு
தலைவன் தாள் சரண் புகுந்த
எங்கள் குடும்பத் தலைவியே!
தங்கள் நினைவாக இம்மலரை
உங்கள் பொற்பாதங்களில்
அன்புக் காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்

**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**



# அமரர் திருமதி சரவணமுத்து பாக்கியம்

அவர்கள்



அன்னை
மடியில்
10.09.1933

இறைவன்
அடியில்
14.03.2011

## திதி வெண்பா

ஆண்டு விகிர்தி அமைந்த மாசித்திங்கள்
பூண்ட பூர்வபக்க தசமிதனில் – மாண்பு
சரவணமுத்து பத்தினியார் பாக்கியம் அம்மையார்
அரனடி அடைந்தார் காண்

உ
சிவமயம்

**திருச்சிற்றம்பலம்**

**திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்**

**திருமுறை 2** **திருவாரூர்** **பண் : காந்தாரம்**

தந்தையார் போயினார் தாயரும் போயினார்
தாமும் போவோர்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
கொண்டு போவார் (பார்க்கின்றார்)
எந்தநாள் வாழ்வதற் கே மனம் வைத்தியா
லேழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலாமையால்
கொண் டஞ்சல் நெஞ்சே

**திருப்புகலூர்** **பண் : கொல்லி**

தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்பினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையு
மேத்தலா மிடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்
கியாது மையுற வில்லையே

**மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்**

**திருமுறை 8**

**திருவேசறவு**

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

## திருவிசைப்பா

**திருமுறை 9** **பண் : பஞ்சமம்**

**கோயில்**

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலத் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

**கோயில்** **பண் : பஞ்சமம்**

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
யீசற் காட் செய்ம்மின் குழாம்புகுந்த
தண்டங் கடந்த பொருளை
வில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்று முள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே

**திருமுறை 10** **திருமந்திரம் - திருமூலநாயனார்**

ஊரெலாங்கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டியைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே

## பட்டினத்தார் பாடல்

**திருமுறை 11** **திருவெற்றியூர்**

ஐயுந் தொடர்ந்து விழியும் செருகி யறிவழிந்து
மெய்யம் பொய்யாகி விடுகின்ற போதென்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர்! திருநீறுமிட்டுக்
கையிந் தொழப்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே.

**திருமுறை 12** **புராணம்**

பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவ நெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப்புகலியார் கோனமுது செயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரி பூங்கழல் போற்றி

## திருப்புகழ்

கைத்தல் நிறை கனியப்பமொடவல் பொரி
  கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியிலுறைபவர்
  கற்பகமெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
  மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
  மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமிழடைவினை முற்படு கிரிதனில்
  முற்பட எழுதிய முதல் வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
  அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிரணி படும்
  அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
  அக்கம ணமருள் பெருமானே

## ஔவையார் அருளிச் செய்த
## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூவும்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெங்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த தூய மெய்ஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்துந் தெளிவாய்

பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வானிக் குவலயந் தன்னில்
திருவடி வகைத்துத் திறம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனத் கருளிக்

கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயமும்
இன்புறு கருணை இனிதெனக் கருளித்
கருவிக ளெடுக்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமெரு நான்கும் தந்ததெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயல் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழுமந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி

இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சுஷ்மும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு இல்லாம னோவலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

**விநாயகர் அகவல் முற்றிற்று**

## சிவபுராணம்

### திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ் சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

## வம்சாவழி

**சீனிவாசகம் + பொன்னு (தா**

வள்ளிப்பிள்ளை கந்தையா

காசிப்பிள்ளை சிவபாக்கியம்

**நாகலிங்கம் + கைராசிப்பிள்ளை (மா**

சரவணமுத்து பாக்கியம்

கந்தையா மகாதேவி

சிவ

**சரவணமுத்து பாக்கிய**

சிவகுமாரன்
மீனாம்பிகை
ஷிந்துஜா
ஜெந்தினி

தேவகுமாரன்
சுவர்ண தேவி
அஜந்தன்
ஜனனி

ஜெயகுமாரன்
கிரிஜா
இராகுல்
அனித்தா
கோகுல்

## வம்சாவழி

**+ பொன்னு (தாய் தந்தையர்)**

யம்

தங்கம் முத்துவேலு

பாக்கியம் சரவணமுத்து

**சிப்பிள்ளை (மாமனார் மாமியார்)**

சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை

தங்கராசா அமராவதி

**ணமுத்து பாக்கியம்**

ஜெயகுமாரன்
கிரிஜா
இராகுல்
அனித்தா
கோகுல்

சாந்தகுமாரி
யோகலிங்கம்
நிஷாந்தன்
துரந்தரன்
துவாரகன்
ஹரிஸன்

பாலகுமாரன்
ராதிகா
நிலானி
ஷியான்

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

போராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தோற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

## மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன்
## 108 போற்றி

| | | |
|---|---|---|
| ஓம் அங்கயற்கண் | அம்மையே | போற்றி |
| ஓம் அகிலாண்ட | நாயகியே | போற்றி |
| ஓம் அருமறையின் | வரம்பே | போற்றி |
| ஓம் அறம்வளர்க்கும் | அம்மையே | போற்றி |
| ஓம் அரசிளங் | குமரியே | போற்றி |
| ஓம் அப்பர் | பிணிமருந்தே | போற்றி |
| ஓம் அமுத | நாயகியே | போற்றி |
| ஓம் அருந்தவ | நாயகியே | போற்றி |
| ஓம் அருள்நிறை | அம்மையே | போற்றி |
| ஓம் ஆலவாய்க் | கரசியே | போற்றி |
| ஓம் ஆறுமுகத்தின் | அன்னையே | போற்றி |
| ஓம் ஆதியின் | பாதியே | போற்றி |
| ஓம் ஆலால | சுந்தரியே | போற்றி |
| ஓம் ஆனந்த | வல்லியே | போற்றி |
| ஓம் இளவஞ்சிக் | கொடியே | போற்றி |
| ஓம் இமயற் | தாசியே | போற்றி |
| ஓம் இடபத்தோன் | துணையே | போற்றி |
| ஓம் ஈசு | வரியே | போற்றி |
| ஓம் உயிர் | ஓவியமே | போற்றி |
| ஓம் உலகம் | மையே | போற்றி |
| ஓம் ஊழ்வினை | தீர்ப்பாய் | போற்றி |
| ஓம் எண்திசையும் | வென்றோய் | போற்றி |
| ஓம் ஏகன் | துணையே | போற்றி |
| ஓம் ஐங்கரன் | அன்னையே | போற்றி |
| ஓம் ஐயந் | தீர்ப்பாய் | போற்றி |
| ஓம் ஒப்பிலா | அமுதே | போற்றி |

| | | |
|---|---|---|
| ஓம் ஓங்கார | சுந்தரியே | போற்றி |
| ஓம் கற்றோர்க் | கினியோய் | போற்றி |
| ஓம் கல்லார்க்கும் | எளியோய் | போற்றி |
| ஓம் கடம்பவன | சுந்தரியே | போற்றி |
| ஓம் கலியாண | சுந்தரியே | போற்றி |
| ஓம் கனகமணிக் | குன்றே | போற்றி |
| ஓம் கற்பின் | அரசியே | போற்றி |

| | | |
|---|---|---|
| ஓம் கருணை | யூற்றே | போற்றி |
| ஓம் கல்விக்கு | வித்தே | போற்றி |
| ஓம் கதிரொளிச் | சுடரே | போற்றி |
| ஓம் கற்பனை கடந்த | கற்பகமே | போற்றி |
| ஓம் காட்சிக் | கினியோய் | போற்றி |
| ஓம் காலம் வென்ற | கற்பகமே | போற்றி |
| ஓம் கிளியேந்திய | கரத்தோய் | போற்றி |
| ஓம் குலச்சிறை | காத்தோம் | போற்றி |
| ஓம் குற்றம் பொறுக்கும் | குணமே | போற்றி |
| ஓம் கூடற்கலாப | மயிலே | போற்றி |
| ஓம் கோலப் | பசுங்கிளியே | போற்றி |
| ஓம் சம்பந்தன் | ஞானத்தாயே | போற்றி |
| ஓம் சக்தி | வடிவே | போற்றி |
| ஓம் சங்கம் | வளர்த்தாய் | போற்றி |
| ஓம் சிவகாம | சுந்தரியே | போற்றி |
| ஓம் சித்தந் | தெளிப்பாய் | போற்றி |
| ஓம் சிவயோக | நாயகியே | போற்றி |
| ஓம் சிவானந்த | வல்லியே | போற்றி |
| ஓம் சிங்கார | வல்லியே | போற்றி |
| ஓம் செந்தமிழ்த் | தாயே | போற்றி |

| | | |
|---|---|---|
| ஓம் செல்வத்துக் | கரசியே | போற்றி |
| ஓம் சேனைத் | தலைவியே | போற்றி |
| ஓம் சொக்கர் | நாயகியே | போற்றி |
| ஓம் சைவநெறி நிலைக்கச் | செய்தோய் | போற்றி |
| ஓம் ஞானப் | பூங்கோதையே | போற்றி |
| ஓம் ஞானாம் | பிகையே | போற்றி |
| ஓம் தமிழர்குலச் | சுடரே | போற்றி |
| ஓம் தண்டமிழ்த் | தாயே | போற்றி |
| ஓம் திருவுடை | யம்மையே | போற்றி |
| ஓம் திசையெலாம் | புரந்தாய் | போற்றி |
| ஓம் திரிபுர | சுந்தரியே | போற்றி |
| ஓம் திருநிலை | நாயகியே | போற்றி |
| ஓம் தீந்தமிழ்ச் | சுவையே | போற்றி |
| ஓம் தெவிட்டாத | தெள்ளமுதே | போற்றி |
| ஓம் தென்னவன் | செல்வியே | போற்றி |
| ஓம் தேன்மொழி | யம்மையே | போற்றி |
| ஓம் தையல் | நாயகியே | போற்றி |
| ஓம் நற்கனியின் | சுவையே | போற்றி |
| ஓம் நற்றவத்தின் | கொழுந்தே | போற்றி |
| ஓம் நல்ல | நாயகியே | போற்றி |
| ஓம் நீலாம் | பிகையே | போற்றி |
| ஓம் நீதிக் | கரசியே | போற்றி |
| ஓம் பக்தர்கள் | திலகமே | போற்றி |
| ஓம் பழமறையின் | குருந்தே | போற்றி |
| ஓம் பரமானந்தப் | பெருக்கே | போற்றி |
| ஓம் பண்ணமைந்த | சொல்லே | போற்றி |
| ஓம் பவளவாய்க் | கிளியே | போற்றி |
| ஓம் பல்லுயின் | தாயே | போற்றி |
| ஓம் பசுபதி | நாயகியே | போற்றி |

| | | |
|---|---|---|
| ஓம் பாகம்பரியா | அம்மையே | போற்றி |
| ஓம் பாண்டிமா | தேவியே | போற்றி |
| ஓம் பார்வதி | அம்மையே | போற்றி |
| ஓம் பிறவிப் பிணி | தீர்ப்பாய் | போற்றி |
| ஓம் பெரிய | நாயகியே | போற்றி |
| ஓம் பொன்மயி | லம்மையே | போற்றி |
| ஓம் பொற்கொடி | அன்னையே | போற்றி |
| ஓம் மலையத் துவசன் | மகளே | போற்றி |
| ஓம் மங்கல | நாயகியே | போற்றி |
| ஓம் மழலைக் | கிளியே | போற்றி |
| ஓம் மனோன்மணித் | தாயே | போற்றி |
| ஓம் மண்சுமந்தோன் | மாணிக்கமே | போற்றி |
| ஓம் மாயோன் | தங்கையே | போற்றி |
| | | |
| ஓம் மாணிக்க | வல்லியே | போற்றி |
| ஓம் மீனவர்கோன் | மகளே | போற்றி |
| ஓம் மீனாட்சி | யம்மையே | போற்றி |
| ஓம் முழுஞானப் | பெருக்கே | போற்றி |
| ஓம் முக்கண்சுடர் | விருந்தே | போற்றி |
| ஓம் யாழ்மொழி | யம்மையே | போற்றி |
| ஓம் வடிவழ | கம்மையே | போற்றி |
| ஓம் வேலனுக்கு | வேல்தந்தாய் | போற்றி |
| ஓம் வேத | நாயகியே | போற்றி |
| ஓம் வையகம் | வாழ்விப்போய் | போற்றி |
| ஓம் அம்மையே அம்பிகையே | போற்றி | போற்றி |
| ஓம் அங்கையற்கண் அம்மையே போற்றி | | போற்றி |

உ

சிவமயம்

## வயிரவர் துதிப் பாடல்கள்

திருச் சிற்றம்பலம்

### தேவாரம்

**முதலாந்திருமுறையிலிருந்து :**

அறங்கிளரும் நால்வேத மாலின்
கீழிருந்தருளியமரர் வேண்ட
நிறங்கிளர் செந்தாமரை யோன்
சிரமைந்தினொன் றறுத்த நிமலர் கோயில்
திறங்கொள் மணித் தரளங்கள்
வரத்திரண்டங் கெழிற் குறவர் சிறுமிமார்கள்
முறங்களிற் கொழித்து மணிசெல
விலக்கி முத்துலைப் பெய்முது குன்றமே

**நான்காந் திருமுறையிலிருந்து :**

விரித்தபல் கதிர்கொள் சூலம்
வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோல கால
பைரவனாகி வேழம்
உரித்துமை அஞ்சக் கண்டு
ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே

**ஏழாந் திருமுறையிலிருந்து :**

ஏற்ற அந்தணர் தலையினை அறுத்து
நிறைக்க மாலுதிரத்தினை யேற்றுத்
தோன்று தோண்மி சைக்களே பரந்தனைச்
சுமந்த மாவிரதத்த கங்காளன்
சான்று காட்டுதற் கரியவன் எளியன்
தன்னைத் தன்னிலா மனத்தார்க்கு
மான்று சென்றணை யாதவன் தன்னை
வலிவலந்தன்னில் வந்து கண்டேனே.

**எட்டாந் திருமுறையிலிருந்து :**

நல்ல மலரின் மேல் நான்முகனார் தலை
ஒல்லை யரிந்த தென் றுந்தீபற
உகிரா லரிந்த தென் றுந்தீபற

**பன்னிரண்டாந் திருமுறையிலிருந்து**

இத்தன்மை நிகழு நாள்இவர் தொண்டிருங் கயிலை
அத்தர் திருவடியினைக்கீழ்ச் சென்றணைய அவருடைய
மெய்த்தன்மை அன்புநுகர்ந்தருளுவதற்கு விடையவர் தாம்
சித்தமகிழ் வயிரவராய்த்திருமலை நின்றணைக்கின்றார்

**திருச்சிற்றம்பலம்**

**கந்தபுராணத்திலிருந்து**

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென ஆல மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறிந்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற்கழல்கள் ஏத்துவாம்.

**காஞ்சிப்புராணத்திலிருந்து :**

எளியாரை வலியர் வாட்டின்
வலியரை யிரு நீர்வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டும்
எனுமுரைக் கமையவன்றே
தெளியுமா வலியைச் சென்றோற்
செகுத் துரிக் கவயம் போர்த்த
வளியுளர் கச்சி காவல்
வயிரவர்க் கன்பு செய்வாம்

**காசி காண்டத்திலிருந்து :**

பாதகஞ் செய்தோர்க் கெல்லாம்
பரிவினாற் றண்ட மாற்றித்
தோதக பாவ நீக்கித்
துகளறும் புனிதராக்கி
மேதகு முத்தி சேர்க்கு
மெய்யன் முத்தலைச் சூற்கையன்
போதக முடைய கால
வயிரவன் பொற்றாள் போற்றி

# மங்களம்

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்

ஜெயகணேச மங்களம் ஸ்ரீ கணேச மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்

சதாசிவ மங்களம் மகேஸ்வரா மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்

பராசக்தி மங்களம் மகாசக்தி மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்

தட்சணாயமங்களம் தட்சணா மூர்த்திக்கு மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்

வேல்முருகா மங்களம் வேலாயுதா மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்

ஐயனுக்க மங்களம் ஐயப்பனுக்கு மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்

ஆஞ்சனேய மங்களம் அனுமந்தனே மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்

சூலவரைரவா மங்களம் சூலாயுதா மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்

அனைவருக்கும் மங்களம் அன்புக்கு மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்

சுபம்.

# நன்றி நவிலல்

எமது அன்புக்கும் பாசத்துக்கும் உரிய
எங்களின் அருமைத் தாயார்
திருமதி சரவணமுத்து பாக்கியம் அவர்களின்
மரணச் சடங்கின்போது பல வழிகளிலும்
உதவி புரிந்தவர்களுக்கும்,
இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும்,
உள்ளூரிலும், வெளியூரிலும் இருந்து தபால், தொலைபேசி மூலம்
அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும்,
இறுதி நிகழ்வில், அந்தியேட்டி கிரியை,
வீட்டுக் கிரியைகளிலும் பங்குகொண்ட
உற்றார் உறவினர் நண்பர்களுக்கும்,
இம்மலரைக் குறுகிய காலத்தில் அச்சிட்ட
ஜே.ஆர் அச்சகத்தாருக்கும்,
எமது இதயங்கனிந்த
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி
இங்ஙனம்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

11, Longwood Gardens
Ilford
Essex IG5 OEB, UK.



## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சகபாணி
அருள்வாமி அபிராமியே.

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே !

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

**இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்**
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்





Designed & Printed @ JR Print ☎020 8503 6643